<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**<u>C.C.No. 162-2025</u>**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 4 | | Examined as : PW 3 | |
| Name | : பாலமுருகன் | Defence | : |
| Father/Husband Name | : ராமநாதன் | Court | : |
| Village | : திருச்சம்பள்ளி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 47/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 25.02.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.07.2021 அன்று நான் பூம்புகார் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது அன்றயை தினம் கடற்கரையில் பாதுகாப்பு பணியில் இருந்தேன். இரவு 09.00 மணிக்கு எனது பணியை முடித்துவிட்டு 10.00 மணியளவில் எனது வீட்டிற்கு வந்த போது எனது மனைவி எங்கள் தெருவை சேர்ந்த சுரேஷ் மற்றும் தினகருக்கு விபத்து ஏற்பட்டதாக கூறினார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 11.07.2021ம் தேதி இரவு 07.45 மணிக்கு நானும் ரபீக் என்பவரும் அவரது வீட்டின் வாசலில் நின்று பேசிக்கொண்ருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது இருசக்கர வாகனத்தை சுரேஷ் என்பவர் ஓட்ட பின் இருக்கயைில் தினகர் என்பவர் அமர்ந்துக்கொண்டும் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்றுகொண்டிருந்த போது எதிரே வந்த Scooty இருசக்கர வாகனத்தை எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சுரேஷ் ஓட்டிசென்ற வானத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும் அதில் சுரேஷ் என்பவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக

போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது இந்த விபத்தை நான் பார்க்கவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**